பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5·00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 12 ஞாயிற்றுக்கிழமை (27-12-1992) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 31

## வாழைச்சேனையில் சம்பவம்:

# அரச அதிகாரி உட்பட 6 பேர் கண்ணியில் சிக்கி மரணம்!

## ஜீப் சுக்குநூறாகியது

கொழும்பு, டிசம்பர் 27

புனானை — வாழைச்சேனைப் பகுதியில் நேற்று அரசாங்க ஜீப் ஒன்று நிலக் கண்ணி வெடியில் சிக்கி சுக்குநூறாகியது. அதில் பயணம் செய்த உதவி அரசாங்க அதிபரான முஸ்லிம் ஒருவரும், மற்றும் ஐந்து பேரும் உயிரிழந்தனர்.

கண்ணிவெடியில் சிக்கிய மாருதி ரகத்தைச் சேர்ந்த ஜீப் உருத்தெரியாதவகையில், சிதைந்து நாசமாகியது என்றும்—

அதில் பயணம் செய்த உதவி அரசாங்க அதிபரும் மேலதிக அரசாங்க அதிபருமான உஸ்மான் என்பவரும், மற்றும் ஐவரும் உடல் சிதறிப் பலியானார்கள் என்றும்— இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த கண்ணிவெடிச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்த அனைவரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இவ்வாண்டில் புலிகளின் தாக்குதல்களால்

# 1,379 படையினர் உயிரிழப்பு' 1,284 ஆயுதங்கள் மீட்பு!!

யாழ்ப்பாணம், டிச. 27

இவ்வாண்டில் — கடந்த 22 ஆம் திகதி வரையான காலத்தில் — விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் ஆயிரத்து 379 படையினர் உயிரிழந்தவர்; ஆயிரத்து 284 ஆயுதங்களும், சுமார் 7 லட்சம் ரவைகளும், பெரும் எண்ணிக்கையான ஷெல்கள், கைக்குண்டுகள், தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியனவும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன

இத்தகவல்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' சஞ்சிகை வெளியிட்டிருக்கிறது.

இக்காலப்பகுதியில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| o ஏ. கே. வகைகள் | — | 521 |
| o ரி 56 – II | — | 265 |
| o ஜி 3 ஏ 3 | — | 46 |
| o எஸ். எல். ஆர் | — | 38 |
| o எவ். என். ஸி. | — | 187 |
| o 303 ரைபிள் | — | 25 |
| o பிஸ்டல் | — | 02 |
| o சிக்னல் பிஸ்டல் | — | 05 |

(5ஆம் பக்கம் பார்க்க

# புதிய ஆண்டில் குடாநாடு மீது பல தாக்குதல்கள் நடக்கலாம்

யாழ்ப்பாணம். டிச. 27

★ வரும் ஆண்டில் யாழ். குடாநாடு மீது சிறியதாகவும், பெரியதாகவும் பல இராணுவ நடவடிக்கைகளைச் சிங்களப்படை நடத்த முனையலாம்.

★ இப்படையெடுப்புகளுக்கு வாய்ப்பாக வட தமிழீழம் மீது ஏற்கனவே அரசு விதித்த பொருளாதாரத் தடை மேலும் இறுக்கப்பட்டுள்ளது. இதனை போருக்கான சமிக்ஞையாகவே கொள்ள வேண்டும்,

— இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' சஞ்சிகை தெரிவித்திருக்கிறது.

சிங்களப் படைகளுக்கு இந்த ஆண்டில் ஏற்பட்ட பேரிழப்புகள் அவர்களின் உறுதியைச் சீர்குலைத்து விட்டன என்பது உலகறிந்த உண்மை.

( 6ஆம் பக்கம் பார்க்க)

# திடீர் தேர்தல் ஒன்றுக்கு பிரேமா தயாராகுகிறார்?

லண்டன், டிச. 27

தேர்தல் கூட்டங்களை நடத்தாமல் சுவரொட்டிகள் ஒட்டாமல் ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றியீட்ட முடியும் என ஜனாதிபதி பிரேமதாஸா கூறியிருக்கிறார். அரசு நிகழ்ச்சிகள் அனைத்தையும் அரசியல் நிகழ்ச்சிகளாக்கி நாளொன்றுக்கு குறைந்தது ஒரு பொதுக் கூட்டத்திலாவது பங்குபற்றும் ஜனாதிபதி, அவ்வாறான கருத்தை வெளியிட்டிருப்பது தேர்தல் பிரசாரத்துக்கு போதிய கால அவகாசம் வழங்காமல் திடீர் தேர்தல் ஒன்றை அறிவிக்கவே.

—இவ்வாறு சிங்கள அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரேமதாஸாவின் அறிவிப்பின்படி அவரது கட்சியில் உள்ள அங்கத்தவர்கள் எண்ணிக்கை மாத்திரம் 40 லட்சமாகும். இது உண்மையானால் 91லட்சம் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களைக் கொண்ட நாட்டின் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெறுவது மிகச் சுலபமாகும். 1977 பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஐ. தே. க வெற்றியீட்டிய போது கூட அக்கட்சிக்கு 31 லட்சம் மக்களே வாக்களித்திருந்தனர். — இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (உ-5)

## கப்பல் மூலம் பொருள்கள் தொடர்ந்து அனுப்பப்படும்

### கொழும்பில இணக்கம்

யாழ்ப்பாணம், டிச. 27

கப்பல் மூலமான உணவு விநியோகம் வடபகுதிக்குத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

அத்தியாவசிய சேவைகள் பிரிவு அதிகாரிகள் இவ்வாறு யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு செ. பத்மநாதனிடம் வாக்குறுதி அளித்துள்ளனர்.

வட பகுதிக்கு கப்பல் மூலமான உணவு விநியோகத்தை இம் மாதத்துடன் இடைநிறுத்தவிருப்பதாக அண்மையில் கொழும்பில் இருந்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் யாழ் செயலகத்துக்கு அறிவித்திருந்தார்.

அதையடுத்து இது தொடர்பாகப் பேச்சு நடத்துவதற்காக யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ பத்மநாதன் கொழும்பு சென்றிருந்தார்.

கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் யாழ். உணவு நிலைவரம் குறித்து அவர் பேச்சு நடத்தினார். அதையடுத்து கப்பல் மூலம் உணவு அனுப்பும் சேவையைத்

[5 ஆம் பக்கம் பாரக்க]

## முச்சந்தி முரளி



உவர் பனங்காட்டு 'நரி' சிம்மாரன் சலசலப்புக்கு அஞ்சுவாரோ .....!

## வடக்கிற்கு பொருள்களை 'குமாரி' ஏற்றிவராது!

### அதன் சேவை நிறுத்தப்படுகிறது

வடபகுதிக்கான உணவு விநியோக சேவையில் 'குமாரி' கப்பல் இனிமேல் ஈடுபடுத்தப்படமாட்டாது.

இதனை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

'குமாரி' கப்பலுக்குப் பதிலாக புதிய கப்பல் ஒன்று விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும்—

அந்தக் கப்பலை வாடகைக்கு அமர்த்தும் கேள்வி அறிவித்தல் விடுக்கப்பட்டிருப்பதாகவும்—

யாழ். செயலக அதிகாரியிடம் கொழும்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது

எனினும் 'குமாரி' கப்பல் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## எஜமான் போன்று செயற்படுகிறது!

# ராவின் அரசுக்கு எதிராக அ.தி.மு.க. கண்டன தீர்மானம்

சென்னை, டிச. 27

தமிழக ஆளும் கட்சியான அ.தி.மு.க.வின் பொதுக்குழு மத்திய அரசுக்கு எதிராக கண்டனத் தீர்மானங்களை நேற்று நிறைவேற்றியது.

மாநில அரசுகளுக்கு தகுந்த அதிகாரங்கள் இல்லை. மத்திய அரசு எஜமான் அரசாக இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்குவதற்கு அதிகாரப் பகிர்வு வேண்டும். தேவைப்பட்டால் தேசிய அரசியல் நிர்ணய அவையை உருவாக்க வேண்டும். என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமும், நேற்றும் சென்னையில் கூடிய அ.தி.மு.க பொதுக்குழு மொத்தம் 26 தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது

அவற்றில் சில வருமாறு:-

★ தமிழகத்தில் நடைபெற இருக்கும் எந்தத் தேர்தலிலும் அ.தி.மு.க. பிற கட்சிகளுடன் தேர்தல் கூட்டணி

(5 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் 25 லட்சம் பேர் தீவிரவாதிகளாக மாறுவர்!

## அ.தி.மு.க. எச்சரிக்கை

லண்டன், டிச. 27

''தனது துருப்புக்களை மத்திய அரசு உடனடியாகத் திருப்பி அழைக்காவிடில், தமிழ்நாட்டின் 25 லட்சம் தொழிலாளர்களும் ஒவ்வொருபிந்தரன் வாலேயாக— ஒவ்வொரு சீக்கியத் தீவிரவாதியாக — மாறி இராணுவத்தோடு போராடத் தயங்க மாட்டார்கள் ''

நேற்று சென்னையில் முடிவடைந்த அ.தி.மு.கவின் பொதுக்குழுக் கூட்டத்தில் மத்திய அரசுக்கு இவ்வாறான எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தமிழக முதல்வருக்கு அறிவிக்காமல் இந்திய மத்திய அரசு திடீரென தமிழகத்துக்கு பல இராணுவ அணிகளை அனுப்பியிருப்பதைக் கண்டித்து நிறைவேற்றப்பட்ட கட்சியின் தீர்மானத்திலேயே இவ்வாறு எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பிந்தரன் வாலே சீக்கிய தீவிரவாத இளம் தலைவர் என்பதும், அவர் பஞ்சாப் பொற்கோவிலில் இராணுவத்தினருடன் போராடி உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் —

காங்கிரஸ் அரசுடன் தேர்தல் காலத்தில் ஏற்படுத்திய கூட்டணி உடன்படிக்கை நடைபெற்று முடிந்த அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் கைவிடப்பட்டது—என்று பி. பி. ஸியின் சென்னைச் செய்தியாளர் தெரிவித்துள்ளார். (ஓ-5)

## படகுச்சேவை இனிமேல் அல்லிப்பளையிலிருந்து!

தென்மராட்சி, டிச. 27

இதுவரை கிளாலியிலிருந்து நடைபெற்று வந்த படகுச் சேவை நாளை முதல் அல்லிப்பளையிலிருந்து இடம்பெறவுள்ளது.

கொம்படிக்கரையில் நீர் மட்டம் குறைந்து வருவதால் ஆலங்கேணிக்கான படகுச் சேவை அல்லிப்பளையிலிருந்து ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அல்லிப்பளை கிளாலியிலிருந்து சுமார் இரு மைல் தூரத்தில் அமைந்துள்ளது (உ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா பராசக்தி

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா பராசக்தி அவர்கள் 28 - 11 - 1992 அன்று புங்குடுதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (கு. க.)வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற குமரேசர் தம்பதிகளின் மருமகளும், சண்முகலிங்கம் (பிரான்ஸ்) மகாலிங்கசிவம் (கனடா), புவனேஸ்வரி கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரெட்ணராஜா கனடா), மிதுனரதிதேவி (பிரான்ஸ்), சிவராணி [நோனா - கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும், கார்த்திகேசு, காலஞ்சென்ற நாகேஸ், பசுபதிப்பிள்ளை, காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை [ஆசிரியர்], கிருஷ்ணபிள்ளை [கனடா], சிவபாக்கியம் [ராசு], சற்குணம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற நாகம்மா, காலஞ்சென்ற கணேசபிள்ளை, செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுபடி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சகோதரங்கள்.

பொற்பதி வீதி,
கொக்குவில் [23802]

## திருமதி பொன்னம்பலம் தங்கலட்சுமி

கைதடி வடக்கு, கைதடியைச் சேர்ந்த திருமதி பொன்னம்பலம் தங்கலட்சுமி (தங்கம்) அவர்கள் (25-12-92) வெள்ளிக்கிழமை இரவு காலமானார். இவர் பொன்னம்பலம் (முன்னாள் காசாளர், தெ. மே. தோ. கூ. சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசதுரை, சோமாதிராசா (இளைப்பாறிய புகையிரத பிரதம பாதுகாவலர்), விசுவநாதர் (இளைப்பாறிய அரசாங்க உத்தியோகஸ்தர்) காலஞ்சென்ற திருமதி பகவதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகதேவன், சண்முகானந்தம் (காணிப்பதிவு அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்), இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற கமல தேவி, மற்றும் சண்முகலிங்கம் (கணக்காளர், பூநகரி ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. சண்முகரத்தினம் (அரசினர் வைத்தியசாலை, கைதடி) அவர்களின் சிறிய தாயாரும், கமலாதேவி, சிவநாதன் (இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்), கமலதாசன், இலங்காதேவி, கலாதேவி (ஆசிரியை, கைதடி) ஆகியோரின் அன்பு மாமியாரும், நளினி மாலினி, ஜெயந்தினி, பரமானந்தம், சிவவரதன், சிவாதரி, ரஜனி, கஜன், சஜன், நவதர்சன, நிதிலா, ரிஜிகேசன் ஆரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (26-12-92) சனிக்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பொ. சண்முகலிங்கம்
(மகன்)

கைதடி வடக்கு.
(23800)

## சுப்பர் குமாரசாமி (சு கு)

(பிரபல வர்த்தகரும், விவசாயியும)

நயினாதீவு. பிரபல வர்த்தகர் சுப்பர் குமாரசாமி அவர்கள் 2·-1· 1992 புதன்கிழமை நயினாதீவில் சிவபதமடைந்தார் இவர் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான, பராசத்தி, கண்பன், பொன்னுத்துரை, மற்றும் மயில்வாகனம் நாகமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும், விந்துவான் குமாரசாமி. இராமலிங்கம். பார்வதி. நாகமுத்து, காலஞ்சென்றவர்களான சுப்பையா, கணபதிப்பிள்ளை, கதிரவேலு (C. A S ), இராசமணி (ஆசிரியை) ஆகியோரின் பாசமுள்ள மைத்துனரும், பத்மாசனிதேவி, மங்களேஸ்வரி (ஆசிரியை, வவுனியா), தவமணிதேவி, நிர்மலாதேவி (இந்தியா), சபாநாதன் (வர்த்தகர்), லலிதாம்பாள் (சுவிஸ்), ஸ்ரீதரன் (சுவிஸ்), ஸ்ரீபதி (கனடா), அருள்மொழி (லண்டன்) ஆகியோரின் பேரன்புத் தந்தையும், சண்முகநாதபிள்ளை அதிபர், யாழ் மத்திய கல்லூரி), ஓங்காரநாதன் (முகாமையாளர், இலங்கை வங்கி, வவுனியா, இராசலிங்கம் (உரிமையாளர் குளோப்றேடர்ஸ், வவுனியா), திலைநாதன் (A. O பிரதேச சபை, நயினாதீவு), தவமலர், சிவானந்தன் (சுவிஸ்), கௌசல்யா (சுவிஸ்), கௌரி கனடா), க்னேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் நேசமுள்ள மாமனாரும், கப்டன் வானதி, கலாநிதி தற்காலிக உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்), அமுதபதி, உமாசுதன் (கனடா), குருபரன் (சுவிஸ்), நளினி (இந்தியா), பாமினி, முரளி, சிதர்சினி, சிவரஞ்சினி, முகுந்தன், ஜெயந்தன், ரஜீவ், சந்திரகாசன் (இந்தியா, இராகுலன் (இந்தியா), இராகவன் (இந்தியா, ஆராதனா, சங்கீதா, நிமலன், உஷாப்பிரியா (சுவிஸ்), சுவிதா (சுவிஸ், நிஷாநதன் கனடா), லக்ஷ்மன் (லண்டன்) ஆகியோரின் செல்லப்பேரனாருமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நயினாதீவு சல்லிவரவை மயானத்தில் 24-12-1992இல் நிறைவெய்தின. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல் :
நா. க. சண்முகநாதபிள்ளை

இல. .74, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (23808)

# நாளை நடப்பவை

யாழ்ப்பாணம், டிச. 27
சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச 27
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் ஆலயத்தில் நாளை பிற்பகல் 4 30 மணிக்கு 'ஒளிவிழா' நிகழ்ச்சி நடைபெறும்.

★ ★ ★

மல்லாகம் குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை 'ஒளி விழா' நடைபெறும். (நு)

★ ★ ★

யாழ்ப்பாணம். டிச. 27
மானிப்பாய் "அசம்பிளி ஒவ் கோட்" ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நத்தார் கீதங்கள் இசைக்கப்படும். (க)

★ ★ ★

தென்மராட்சி, டிச. 27
நத்தார் தினத்தை ஒட்டி இத்தாவில் பாடசாலையில் நாளை 'ஒளிவிழா' நிகழ்ச்சி நடைபெறும். (உ-177)

## நேர்முகப் பரீட்சை

கொழும்பு, டிச 27
அதிபர் தரம் 1, 2. 3 ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இறுதியாக நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் இன்னும் சிலர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த. மகாசிவம் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார். (உ-த-ப)

## திருவெம்பாவை வீதி பஜனைக்கு அனுமதி

எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகும் திருவெம்பா காலத்தில் அதிகாலை வேளை திருப்பள்ளி எழுச்சிப் பாடல் ஊர்வலம் நடத்த மட்டக்களப்பு - காரைதீவு விசேட அதிரடிப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

அதிகாலை 3 30 மணியளவில் ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் காரைதீவில் உள்ள 7 கோவில்களையும் தினமும் சென்று வர அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இந்து சமய விருத்திச்சங்கம் தெரிவித்தது.

## நிலஅளவை உதவியாளர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை - 1992

மேற்படி பரீட்சை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இம்மாதம் 30 ஆம் திகதி காலை 8 30 மணிக்கு நடைபெறும். இப்பரீட்சைக்கு ரூபா. 75/-ஐ பரீட்சைக்கட்டணமாகச் செலுத்தி, பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பத்தை அனுப்பியவர்கள் மாத்திரமே தோற்றலாம்.

இதற்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் தாம் இப் பரீட்சை முடிவு திகதிக்கு முன்னர் விண்ணப்பித்தமைக்கு ஆதாரமாகவுள்ள அஞ்சலக பதிவுத் தபாலுக்கான பற்றுச்சீட்டையும், தமது அடையாள அட்டையையும் யாழ் கல்வித் திணைக்களத்தில் இம்மாதம் 28 ஆம் திகதி சமர்ப்பித்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் இவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பப் டிவப் பிரதி ஒன்றையும் கல்வித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்

ஆர். சுந்தரலிங்கம்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

[சி-4049]


# சயந்தன் கல்வி நிலையம்

101/9 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கையில் ஆஸ்ரன் கல்வி நிலையத்தில் இயங்குகிறது)

## A/L 93 கணக்கியல்
புதிய பிரிவு
ஆரம்பம்: 02 - 01 - 1993
மாலை 2 மணி

## A/L 94 கணக்கியல்
புதிய பிரிவு

(தொடக்கத்திலிருந்து கற்பித்து முழுப்பாடத் திட்டமும் திட்ட வட்டமாக பூர்த்தியாக்கப்படும்)
ஆரம்பம்: 05 - 01 - 1993
மாலை 4 மணி

தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்:
திரு. V. உருத்திரசிங்கம்

முக்கிய குறிப்பு: மேலதிக விவரங்களுக்கு நிர்வாகியுடன் தொடர்பு கொள்க.


# இக்கட்டான வேளையில் தமிழகம் செல்கிறார் ராவ்!

சென்னை, டிச 26
தமிழகத்தில் ஆளும் அ. தி. மு. க. விற்கும் மத்தியில் ஆட்சியிலிருக்கும் இந்திராகாங்கரஸிற்கும் இடையிலான கூட்டணி உறவு குறித்து கேள்வி எழுப்பப்பட்டிருக்கும் இவ்வேளையில் —

காங்கிரஸ் தலைவரும் இந்தியப் பிரதமருமான நரசிம்மராவ் நாளை தமிழகத்துக்கு வருகிறார். ஆனால் அ·ர் தமிழகத் தலைநகரான சென்னைக்கு விஜயம் செய்ய மாட்டார் என அறிவிக்கப்படுகிறது.

கன்னியாகுமரியில் நடைபெறவுள்ள தேசிய ஒருமைப்பாட்டு நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவே அவர் விஜயம் செய்கிறார்.

கன்னியாகுமாரி பாறையில் சுவாமி விவேகானந்தர் தியானம் செய்த நூற்றாண்டின் நிறைவு விழாவே ஒருமைப்பாட்டு நாளாகக் கொண்டாடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில் கலந்து கொள்வதற்காக தென்னிந்தியாவுக்கு பிரதமர் ராவ் சென்னைக்கு விஜயம் செய்யாமல், கேரள மாநிலத் தலைநகர் திரிவனந்தபுரத்துக்கு சென்று ஞாயிறு இரவு அங்குள்ள ராஜ்பவனில் தங்குகின்றார்.

அடுத்த நாள் காலை 9. 54 மணிக்கு ஹெலிக்கொப்டர் மூலம் அங்கிருந்து நேராக கன்னியாகுமரி செல்லும் பிரதமர், நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பின்னர் அன்று பகல் 12 மணிக்கு ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதிக்குச் செல்கின்றார்.

இவ்விழாவில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உட்பட தென்மாநிலங்களின் முதலமைச்சர்களும் பங்கேற்கின்றனர். பிரதமருடன் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் மனித மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங், செய்தி, தகவல் ஒலிபரப்பு அமைச்சர் அஜித்குமார், பாஞ்சா ஆகியோரும் தமிழகம் விஜயம் செய்கின்றனர். (உ-எ)

## அயோத்தி விவகாரத்தால்
# இந்தியாவின் அத்திவாரமே ஆட்டம் கண்டுவிட்டதாம்!

புதுடில்லி டிச 27
அயோத்தி பள்ளிவாசல் மீதான தாக்குதல் தேசத்தின் அடி அத்திவாரத்தையே ஆட்டம் காண வைத்துள்ளது.'

இப்படிக் கூறினார் இந்தியப் பிரதமர் திரு. வி. பி, நரசிம்மராவ்.

கடந்த வியாழக்கிழமை காங்கிரஸ் பிரதிநிதிகள் கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

பாரதீய ஜனதாவின் செயலை கண்டிக்கும் தீர்மானமும் அக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.


NAAVALAR KALVI KALAHAM

# நாவலர் கல்விக் கழகம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## வருடாந்த பரிசளிப்பு விழா

எமது நிறுவனத்தில் இன்று (27-12-92 ஞாயிறு) பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் பரிசளிப்பு விழாவுக்கு சிறப்பு விருந்தினராக

திரு. இதயன் அவர்கள்
(விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, யாழ். கல்விக் கோட்டம்)
கலந்துகொள்வார்.

குறிப்பு:- கடந்த கால புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய எமது நிறுவனத்தின் ஆண்டு 5 மாணவர்கள் அனைவரும் இப் பரிசளிப்பு விழாவுக்கு சமுகம் தந்து பரிசில்களைப் பெற்றுச் செல்லவும்.

(C / 4050)


# மரண அறிவித்தல்

## Dr. க பூரணலிங்கம்

வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கோண்டாவில் இ. போ ச. டிப்போ அருகாமையில் வசித்தவருமாகிய Dr. க. பூரணலிங்கம் 26-12-92 சனிக்கிழமை காலை சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் விக்கினேஸ்வரியின் (இராசாத்தி) அன்புக் கணவரும் பகீரதன், விமோசனா, ஜெயரதன், சிறீதரன், ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயநாதன், சுதர்சனா ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெயனா, ஜெகன், பிரசாத் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி நாகலட்சுமி - செல்லமுத்து. காலஞ்சென்ற திருமதி பாக்கியம் அழகையாவின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 26-·2-92 சனிக்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
விக்கினேஸ்வரி - பூரணலிங்கம்

இ. போ. ச. [illegible],
[illegible] (23809)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற்பகலுக்கு பின் மதவாச்சிக்கு அப்பால் செல்ல முடியாத நிலை

## பின்னர் ஏன் பாதுகாபபு வரி?

கொழும்பு, டிச 27

மதவாச்சிக்கு அப்பால் மாலை 4 மணிக்குப் பின்னர் ஒருவரும் செல்ல முடியாதுள்ளது. வடபகுதியில் 5 ஆயிரம் அடிகளுக்குத் தாழ்வாக விமானங்கள் பறக்க முடியாது உள்ளன. கடலோரப் பகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லை. பின்னர் ஏன் பாதுகாப்பு வரி அறவிடப்பட வேண்டும்? பாதுகாப்பு வரி அறவிடப்படுவதன் நோக்கம் தான் என்ன?

சுதந்திரக்கட்சி எம். பி. எம். கே. டி. எஸ். குணவர்த்தனா முன்கண்டவாறு நாடாளுமன்றத்தில் பேசுகையில் கேட்டார். பாதுகாப்பு வரி சட்டத்திருத்த சட்டமூலத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இக்கேள்விகளை எழுப்பினார்.

அமைச்சர் ஹரோல் ஹெரத் பதிலளிக்கையில் —

பாதுகாப்பு வரி ஒரு சதத்தில் இருந்து 3 சதவீதமாக அதிகரிக்கப்படுகின்றது. வடக்கு-கிழக்கில் தீவிரமான யுத்தம் ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது. இந்த யுத்தத்தை நாம் பாரதூரமாக எடுக்க வேண்டும் — என்றார்.

சுதந்திரக்கட்சி எம். பி. சி. வி. குணரத்னா:

வடக்கு - கிழக்கில் யுத்தம் ஒன்று நடக்கவில்லை என்றும் தீவிரவாதிகளை அப்புறப்படுத்தும் வேலைதான் நடக்கிறது என்றும் உங்கள் பிரதமர் கூறினாரே!

அமைச்சர் ஹெரத்: நீங்கள் கூறியதை நான் ஏற்கின்றேன் வடக்கு - கிழக்கில் தீவிரமான யுத்தம் நடக்கின்றது. நான் கூறுவதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த யுத்தத்தில் மக்கள் வெற்றியீட்ட வேண்டும் அல்லது தீர்வு கண்டு நிறுத்த வேண்டும் விரைவில் யுத்தம் முடியும் என்று நம்புகின்றேன். யுத்தம் ஒன்றில் செலவிடப்படும் பணத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருக்க முடியாது. அரசியல் லாபம் அடைய இது தருணமல்ல

இப்படி அவர் கூறினார்

(த-எ)

# ஆயிரம் குடும்பங்களுக்கு ஒரு பிறப்பு இறப்பு பதிவுகாரர்

## 2,730 பேர் புதிதாக நியமனம்

ஆயிரம் குடும்பங்களுக்கு ஒரு திருமண - இறப்பு மற்றும் பிறப்புப் பதிவுகாரர் வீதம் அடுத்த பெப்ரவரி மாதத்தில் புதிதாக 2 ஆயிரத்து 730 பேர் நியமனம் செய்யப்படவுள்ளனர்

இவர்களுக்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளன கலப்பின மக்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள இனங்களின் பிரச்சினைகளை புதிய நியமனங்கள் தீர்க்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக 2 ஆயிரத்து 730 பதிவுகாரர் பிரிவுகளை அமைப்பதற்கான சட்டத்திருத்தம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (த-எ)


விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L
பிரிவு - 1,2
EVENING CLASSES (3-00 — 6-00)
பிரிவு - 1
SAT. & SUN. CLASSES (8-00 — 3-00)

ஆண்டு - 10, 9, 8, 7, 6
வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

ஆண்டு - 1993 க்குரிய
DAY CLASSES [8-00 — 2-00]
(பகல் நேர வகுப்புகள்)
பிரிவு - 1
ஆரம்பம்: 05 — 01 — 1993
→ விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
(சி-2833)


# கொள்ளையில் ஈடுபட்ட மாணவர்கள் பிடிபட்டனர்

வத்தேகம கும்பே என்ற இடத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை கைக்குண்டு, ரிவோல்வர் சகிதம் வந்த இரு பாடசாலை மாணவர்கள் முகாமையாளரைப் பயமுறுத்தி 5 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை கொள்ளை அடித்துவிட்டு தப்பியோட எடுத்த முயற்சி பொதுமக்களின் நடவடிக்கையால் தோல்விகண்டது.

எரிபொருள் நிலையத்தில் கொள்ளையடித்துவிட்டு மேற்படி இரு மாணவர்களும் வழியில் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பறித்துக் கொண்டு தப்பிஓட முற்படுகையிலேயே பொதுமக்கள் அவர்களை மடக்கிப்பிடித்தனர். இவர்கள் எல்பிட்டியப் பகுதியில் உள்ள பிரபல்ய பாடசாலையின் மாணவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களது வீடுகளில் பொலீஸாரால நடத்தப்பட்ட சோதனையின் போது இராணுவச் சீருடை ஒன்றும், 40 தோட்டாக்களும் மீட்கப்பட்டன. [த-3]

# படையினருக்கான ஒலிபரப்பு ஜனவரி முதல் ஆரம்பம்!

கொழும்பு, டிச. 27

ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து பாதுகாப்பு படையினருக்காக இராணுவ ஒலிபரப்புச் சேவை ஒன்றை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்க இருக்கிறது

யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழ், சிங்கள நிகழ்ச்சிகள் இச்சேவையில் ஒலிபரப்பப்படுமாம்

இந்த ஒலிபரப்பு காலை 6 மணி முதல் இரவு 0 மணி வரை ஒலிபரப்பப்படும். விரைவில் மட்டக்களப்பு, வவுனியா, திருமலை, அம்பாறை ஆகிய பகுதிகளுக்கு இச்சேவை விஸ்தரிக்கப்படும்

(த-3)

## கிரெனேட் வெடித்து 11 பேர் காயம்

கொழும்பு டிச. 27

அநுராதபுரம் புதியபாதை புதிய புகையிரத நிலையத்தில் இராணுவச் சிப்பாய் கொண்டு சென்ற கிரெனேட் ஒன்று தற்செயலாக வெடித்ததினால் புகையிரதத்துக்காக காத்துநின்ற பயணிகள் உட்பட 11 பேர் காயமடைந்தனர் (த-3)

## சிரமதானம்

கொழும்புத்துறை, டிச. 27

தொல்புரம் மத்திய சனசமூக நிலையம் வாசிகசாலையின் ஆதரவில் தொல்புரம் மத்தி - பாணாவெட்டி பிரதான வீதி, ஆலய வீதிகள் ஆகியன அண்மையில் நிலைய அங்கத்தவர்களால் சிரமதானப் பணிமூலம் செப்பனிடப்பட்டுள்ளன.

[க 30]


SCHOOL OF TALANT

மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.

க. பொ. த. உயர்தர கணக்கியல் வகுப்புகள்
A/L 93
கணக்கியல் புதிய பிரிவு
ஆரம்பம்: 07 - 01 - 1993
மாலை 4மணி

A/L 94 கணக்கியல் புதிய பிரிவு

(தொடக்கத்திலிருந்து கற்பித்து முழுப்பாடத் திட்டமும் திட்டவட்டமாக பூர்த்தியாக்கப்படும்)

ஆரம்பம்: 07 - 01 - 1993
மாலை 5மணி

தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்
திரு. V. உருத்திரசிங்கம்

முக்கிய குறிப்பு:
மேலதிக விவரங்களுக்கு நிர்வாகியுடன் தொடர்பு கொள்க.
(5676)



THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

கல்வி ஆண்டு - 1993
புதிய அனுமதிகள்
மீண்டும்......
இன்று முதல்
DEC. 31 வரை மட்டுமே வழங்கப்படும்.
[2796]


## 49 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 27 — 03 — 1981

உதிர்வு: 09 — 11 — 1992

### விக்கினேஸ்வரன் யோககுமார்

(தோப்புக்காடு, காரைநகர்)

பாசமிகு செல்வமே! பண்பின் பிறப்பிடமே
குணக் குன்றே காலனவன் நண்பனாக வந்து
வானவன் உன்னை அழைக்க
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி சென்றுவிட்டாய்
தேறுதல் இன்றித் தவிக்கின்றோம்
மாறாது உன் நினைவு எம் உள்ளத்தில்
உன் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்

இன்று 27-12-1992இல் நடைபெறும் அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
குடும்பத்தினர், உறவினர்.

நாவலடி வீதி, வட்டு- தெற்கு.
வட்டுக்கோட்டை.
(23741)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் கலர் என்லாஜ் ஜர் பல்ப் 12V - 100W சிலேவ் யுனிட் ( emoute Flash Unit) மற்றும் குறைந்த விலையில் மிற்சுபிசி படச்சுருள்கள் விற்பனைக்கு உண்டு. K.S. R. Photos, இல. 766, கே.கே.எஸ் றோட், தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம். (23775)

### போசாக்கிற்கு ஜீவாகாரம்

வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும், கர்ப்பிணி தாய்மார்களுக்கும், பாவியுங்கள். ஜீவாகாரம். அண்ணா கோப்பிக் கடை, யாழ்ப்பாணம். (சி/2357)

### 1992 - O/L கணிதம்

1992 O/L கணித விடைகளுடன் மயூரதி வெளியீடு, ரூ 80. 1992 கணித விடைகள் மட்டும் ரூபா 12-00. பூபாலசிங்கம், மக்மிலன், ஸ்ரீகாந்தா, ஸ்ரீலங்கா, தனலக்குமி ஆகியவற்றில் கிடைக்கும். (5454)

### O/L கணிதம்

Distinction பெறுபேறுடைய ஆண்டு 9, 10 உட்பட 30 வருட அனுபவம் உள்ள B. Sc. ( ey ) ஆசிரியரால் கற்பிக்கப்படும் இல:85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (23799)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் வேலை செய்யும் உள்நாட்டு ஆண்களும், வெளிநாட்டுப் பெண்களும் ஏராளமாக இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [23801]

### மிருதங்கம்

நீங்கள் விரும்பும் அளவுக்கேற்ப புதிய மிருதங்கம் குறித்த தவணையில் ஒடருக்கு செய்து தரப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (23761)

### இலவச திருமண சேவை

30 வயது, உத்தரம், செவ்வாய் 8, U. K. தொழில் சில மாதங்களுள் விவாகரத்துப் பெற்றவருக்கு மணப்பெண் U. K. இல் தேவை மணமக்களை நாடுபவர்கள் ஞாயிறு காலையில் சந்திக்கவும். து விமலா, நாச்சிமார் கோவிலடி (23795)

### திருமண சேவை

உங்களுக்குத் தகுந்த பொருத்தமான மணமக்களை அடையவும், உங்கள் விருப்பம் போல் மனநிறைவுடன் வாழவும் நாடுங்கள்; புதிய மாங்கல்யா பவ்றிற சேர்விஸ், இல: 361, பருத்தித்துறை வீதி, நல்லூர் (குறிப்புகள் குழு விவரங்களுடன் உண்டு) [23604]

### சோதிடம்

கல்வியா? உத்தியோகமா? வியாபாரமா? விவசாயமா? விவாகமா? வெளிநாடு பற்றியா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடன் கிடைக்கும். தினமும் காலை 8-30 முதல் 12-30 வரை, மாலை 3 முதல் 6 வரை. த சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (23759)

### தட்டச்சு இயந்திரம் தேவை

புதிய (கீபோட) விசைப் பலகையும், நல்ல தரமான தமிழ் தட்டச்சு தேவை. தொடர்பு கொள்ளவும்: பியூட்டோ என்ரபிரைசஸ் 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-2858)

### ஜோதிட விஞ்ஞானம்

112 நாள் வக்கிரச் செவ்வாய் யுரேனஸ், நெப்ரியூன், புளுட்டோ, நேர்கோட்டின் சஞ்சாரம் 14-4-93 வரை மதக்கலவரங்கள், விமான விபத்துக்கள், இராணுவச் சதிப்புரட்சிகள், ஆட்சிக் கவிழ்ப்புகள், ஜெயலலிதா, புஷ் உட்பட அரசியல் தலைவர்களைப் பதவியிறக்கும். உள்நாட்டுப் போரும் நீடிக்கும் சதயா, கட்டுடை. (5468)

## குண்டுவெடிப்பில் இருவர் காயம்

கொழும்பு, டிச 27

வாழைச்சேனையில் நேற்று முன்தினம் காலை 9 30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்ததில் இருவர் காயம் அடைந்தனர் (த-3)

## 1993ல் ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள்

கொழும்பு, டிச. 27

199 ஆம் ஆண்டில் பின்வரும் திகதிகளில் ஓய்வூதியர்களுக்கு ஓ ஊதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஜனவரி 12 பெப்ரவரி 11, மார்ச் 11, ஏப்ரல் 7, மே 11, ஜூன் 10, ஜூலை 12, ஆகஸ்ட் 12, செப்டம்பர் 14, அக்டோபர் 12, நவம்பர் 11, டிசம்பர் 14. (த-எ)

---

மேர்வின்ஸ் வாடிக்கையாளர்களுக்கு

## ஓர் முக்கிய அறிவித்தல்

**மீண்டும் ஆரம்பமாகிறது மேர்வின்ஸ்**

தரமான:

றபர் ஸ்ராம்புகள், டேற் ஸ்ராம்புகள், பாடசாலைச் சின்னங்கள் (School Badges), பிளாஸ்ரிக் பெயர் போர்ட்டுகள்.

என்பன குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து தரக் காத்திருக்கிறார்கள் மேர்வின்ஸ்

தவிர்க்க முடியாத காரணங்களால் 91/1, மின்சாரநிலைய வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் மீண்டும் தற்காலிகமாக கீழ்க்குறிப்பிட்ட விலாசத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்

தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

**"மேர்வின்ஸ்"**

39, புதுச்செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (5673)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

| மண்ணுலகில்: | | விண்ணுலகில்: |
|---|---|---|
| 26 |  | 09 |
| 01 | | 01 |
| 1947 | | 1992 |

அமரர்

**வைரமுத்து கணேசமூர்த்தி**

(புங்குடுதீவு 10)

திதி: 27 - 12 - 1992

போய் வருவேன் என்றுரைத்தாய்
போனவழி பார்த்திருந்தேன்
வெற்றுடப்பு மீளக் கண்டு
வெந்துமனம் வாடியின்று ஓராண்டு
ஓராயிரம் ஆண்டு போனாலும்
ஓய்ந்திடுமா உன் நினைவு.

அவரின் பிரிவால் வாடும்:
மனைவி க. விஜலட்சுமி,
குடும்பத்தினர்.

3ஆம் குறுக்குத் தெரு,
சினனக்கடை,
யாழ்ப்பாணம். (2376 )

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 19 |  | 27 |
| 06 | | 11 |
| 1917 | | 1992 |

**திருமதி இளையதம்பி தங்கம்மா**

திதி: 27 - 12 - 1992

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், பாசவிளக்காய் பலரும் மதிக்க வாழ்ந்திட்ட எங்கள் அன்புத்தாயே! எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு எங்குதான் சென்றீர்கள். உங்கள் ஆதமா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

"உமையவள் உறை",
இராச வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (23797)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 29 |  | 27 |
| 07 | | 11 |
| 1939 | | 1992 |

**கந்தையா பேரம்பலம்**

நம் வாழ்வு விழுதுகளின் விருட்சத்தில் ஆறுதல் அடையாமல்
பாசத்தின் சுமையோடு பறந்து விட்டீர்களே!
மண்ணை விட்டு உங்க உடல் மறைந்தாலும்
எம்மை விட்டு நினைவுகள் என்றும் மறைவதில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;
மனைவி, பிள்ளைகள்.

கோட்டைக்காடு,
சுன்னாகம். (5457)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அந்தோ! சுயரூபம்!!

நத்தார், உலகெங்கும் வாழும் கிறிஸ்தவப் பெருமக்களின் பிரதான பண்டிகையாகும். மக்களை இரட்சிப்பதற்காக, கடவுள் மனித வடிவத்தில் பாலன் யேசுவாகப் பிறந்த தினமாகையால் நத்தாரை புனித நாளாகவும் கொள்வதுண்டு.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், அடக்கப்பட்ட மக்களுக்காகவும், அவர்தம் மேம்பாட்டுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் உழைத்த யேசு பிரான் உலக மக்களுக்கு கூறிப் போந்தவை என்ன?

உலகில் அன்பு, அமைதி, சமாதானம் நிலவுவதற்கு உதவுங்கள். அயலானையும் உங்களைப் போல நேசித்து அவன் மீது கருணை காட்டுங்கள்.

நத்தார் தினத்தில் அமைதி நிலவ வேண்டும், சமாதானம் மலர வேண்டும் என்பதே உலகக் கிறிஸ்தவர்களின் விருப்பமும் வேண்டுதலுமாக இருப்பதுண்டு. நத்தார் சமாதானத்தைக் குறிக்கும் நாளாகவும் கருதப்படுகிறது.

ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கம் — பௌத்த வாழ்க்கைத் தத்துவங்களையும், மதக்கோட்பாடுகளையும் மேடைகளில் கொட்டி முழங்கும் வேட்தாரி பிரேமதாசாவின் அரசாங்கம்- அந்த அரசாங்கத்தின் விமானப்படை, நத்தார் தினத்தன்று கிறிஸ்தவ மக்கள் வாழ்ந்த பகுதியை இலக்கு வைத்துக் குண்டு வீச்சு நடத்தியது. தேவாலயத்திற்குச் சற்றுத் தொலைவில் குண்டுகளை வீசியது. அதனால் கிறிஸ்தவப் பெண்மணி ஒருவர் மரணமானார். பல கிறிஸ்தவ மக்கள் படுகாயமுற்றனர். வடபகுதி கிறிஸ்தவ மக்களுக்கு அரசு கொடுத்த நத்தார் பரிசுகளா இவை?

நத்தார் தினத்துடன் வடக்கு-கிழக்கில் யுத்த நிறுத்தம் கொண்டுவர முயற்சிக்க வேண்டும் என்ற மதநிறுவனங்களின் கோரிக்கைக்குப் பதிலடி கொடுப்பது போலவும் விமானப் படையினரின் குண்டு வீச்சு நடந்திருக்கிறது.

யுத்த நிறுத்தம், சமாதானம் என்பனவற்றில் தங்களுக்கு எள்ளளவும் நாட்டமில்லை. இராணுவத் தீர்வின் வழியை நாடி நவீன இராணுவ தளபாடங்களையும், ஆயுதங்களையும பயன்படுத்தி தமிழர்களைக் கொன்றே தீருவோம என்று படையினர் செய்தி சொல்லியிருக்கிறார்கள் சமிக்ஞை காட்டியிருக்கிறார்கள்.

ஐ நா. மனித உரிமைகள் தினமான இம்மாதம் பத்தாம் திகதியும் நுணாவிலில் குண்டு வீச்சு நடத்தப்பட்டது. மனித உரிமைகளை மீறுவதற்கு அந்த நாளைவிடப் பொருத்தமான நாள் எது? — என்று கேட்கும் பாணியில் அந்த அனர்த்தம் அமைந்தது.

ஸ்ரீலங்கா அரசின் இத்தகைய அடடூழியங்களும், அதர்மப் போக்குகளும், பண்பு கெட்ட நடத்தைகளும் அதன் சுயரூபத்தையும், காட்டுமிராண்டித் தனத்தையும் அப்பட்டமாக எடுத்துக்காட்டுகின்றன

தமிழ் மக்களின் மத உரிமை உட்பட்ட சகல உரிமைகளையும் பறித்து அவர்களை சகல வகைகளாலும் முழு அடிமைகளாக வைத்திருக்கவே அரசு விரும்புகிறது. வடக்கு - கிழக்கில் உள்ள இந்து ஆலயங்கள் மீது குண்டு வீச்சு நடத்தியும், அங்கே இறை வழிபாடு நடத்த முடியாமல் தடுத்தும், குந்தகம் விளைவித்தும் வந்த அரசு, இப்போது கிறிஸ்தவ மக்களின் மத உரிமைகளையும் தீண்ட முயல்கிறது அதன் பௌத்த பேரினவாத உருவத்தைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. இலங்கை பௌத்த பூமி என்ற மகாவம்சக் கற்பனைக்குச் செயல் வடிவம காட்ட முனைகிறது என்றும் கூறலாம.

# தமிழ் மக்களுக்குத் தீர்வாகக் கொடுக்க ஒன்றுமே இல்லை என்ற வெற்று நிலை!

## தெரிவுக் குழுவின் தீர்வு குறித்து தொண்டா

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாண இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எடுத்து வந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்து விட்டன என்பதை விரக்தியினால் ஏற்பட்ட தாங்கொணாத் துயருடன் நான் தெரிவிக்கின்றேன்

**இ. தொ. காவுக்கு வேறு வழியில்லை**

தமிழர்களின் அபிலாஷைகள் குறித்து இ. தொ கா. மிகத் தெளிவான சிந்தனையும் உள்ளது.

> இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் இனபபிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவுக்கு, தமது கட்சி குழுவிலிருந்து விலகுவதை அறிவித்து எழுதிய கடிதம் இதுவாகும்.

அந்த புரிந்துணர்வுடனும் தீவிர பரிசீலனையின் பின்னருமே இ. தொ. காவின் சிந்தனைகள் அதன் யோசனைகளாக உருவெடுத்தன.

எப்படியாயினும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நிலைப்பாடு தெளிவாக இல்லை. ஆனால் ஒரு விஷயம் நிச்சயமானதாக உள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிந்தனைப் போக்குக்கு முற்றிலும் வேறுபட்டதாக இ தொ. காவின் சிந்தனை உள்ளது ஆகவே தெரிவுக்குழுவுடன் ஒத்துழைப்பதை கைவிடுவதைத் தவிர இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு வேறு வழியே இல்லை.

இ. தொ கா தனது யோசனைகளை விவரமாகத் தயாரித்து அதனை தெரிவுக்குழு முன் பரிசீலனைக்கு வைத்தது.

இந்த யோசனைகளின் முக்கிய அம்சமாக —

பிரிக்கப்படாத வடக்கு — கிழக்கு மாகாணத்திற்கு உண்மையான — அர்த்தமுள்ள — அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது

இ.தொ காவின் யோசனைகளில் ஒரு மாகாணசபையில் முஸ்லிம்களுக்கு சுயாட்சியும், சிறுபான்மைச் சிங்களவருக்கு பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும் என்பது பிரதான அம்சங்களாக காட்டப்பட்டிருந்தன.

ஏழு தமிழ்க் கட்சிகளின் நான்கு அம்ச யோசனையும் இதனை ஆதரித்தது.

**நிர்வாண நிலையை வெளிப்படுத்தியது**

ஒரு மாகாணத்தை இரண்டாகப் பிரிக்கும் விஷயம்தான் தெரிவுக்குழுவில் தேவைக்கு அதிகமாகப் பரிசீலனைக்கு வந்தது

இணைப்பை ரத்துச் செய்வது என்பது தீர்வாகக் கொடுப்பதற்கு ஒன்றுமே இல்லை என்ற நிர்வாண நிலையை வெளிப்படுத்துவதாக உள்ளது. இந்தச் சூன்ய நிலையை மறைப்பதற்கு சமஷ்டி என்ற கானல் நீர் யோசனை முன் வைக்கப்பட்டது.

சமஷ்டி அரசமைப்பு முறையை அரசும் எதிர்க்கட்சிகளும் கூட்டாகக் கொண்டு வருமானால் அது சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்கும் சிறந்த முறையாக இருக்கும் என்று நான் ஒளிவு மறைவின்றிக் கூறினேன்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இந்த வற்புறுத்தலுடன் தெரிவுக்குழு 'சமஷ்டி' என்ற பதத்தைக் கைவிட்டது.

**குழப்பகரமான காட்சி**

இணைப்பும் அற்ற, சமஷ்டி அரசமைப்பு முறையும் அற்ற யோசனை ஒன்றை தெரிவுக் குழு முன்வைத்திருப்பது குழப்பகரமான காட்சி ஒன்றை எம்முன் ஏற்படுத்தியுள்ளது.

இந்தியப் பாணியிலான அதிகாரப்பகிர்வு என்பது இப்போது முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. அதிகாரப் பகிர்வு என்ற இந்தியப் பாணி, அரை 'சமஷ்டி' ஆகும். இந்த முறையின் கீழ் அதிகாரங்கள் மத்திய அரசுப் பக்கமாகவே சாய்ந்துள்ளன. சட்ட சபையை எந்த நேரமும் கலைக்கும் பயமுறுத்தலும் இதில் உண்டு. மாநில அரசு 'காணாமற் போய்விடும்' அச்சுறுத்தல் எப்போதும் இருக்கும்,

**இது மருந்தல்ல**

தமிழர்கள் இப்படியான ஒரு தீர்வை என்றும் நினைத்திருக்கமாட்டார்கள். இப்படி வீரியம் குறைக்கப்பட்ட தீர்வு தமிழர்களின் கவனத்தை ஈர்க்காது இதன் மூலம் அவர்களது விசுவாசத்தையும் வெல்ல முடியாது. பிழையான தீர்வு வியாதிக்கு மருந்தாகாது. இது பிரச்சினையைச் சிக்கலாக்குகின்றது. எனவே தெரிவுக்குழுவின் யோசனையை இ. தொ. காவினால் ஏற்க முடியாது

**காணி விவகாரம்**

வடக்கு - கிழக்கு மக்களுக்கு நிலப்பிரச்சினை தான் மிகவும் முக்கியமானது. தமிழர்களின் அரசியல் சிந்தனையின் அத்திவாரமாக வடக்கு - கிழக்கு இணைந்த பிரதேசம் விளங்குகிறது.

அரச காணிகளை மாகாண சபைக்கு பாரதீனப்படுத்தும் பிரச்சினை தொடர்பாக, 1990 ஓகஸ்டில், அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டில் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. அதற்கு எட்டுக் கட்சிகள் ஆதரவாகவும், இரண்டு கட்சிகள் எதிராகவும் இருந்தன ஆறு கட்சிகள் நடுநிலைமை வகித்தன.

1992 ஜனவரியில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் நிலப்பிரச்சினை தொடர்பாக உருவாக்கப்பட்ட திட்டத்துக்கு நான்கு கட்சிகள் ஆதரவு தெரிவித்தன. ஓர் அரசியல் கட்சி கூட அதனை எதிர்க்கவில்லை எட்டுக் கட்சிகள் நடுநிலைமை வகித்தன,

அதிகாரப்பகிர்வு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது இதுதான் நிலைப்பாடாக இருந்தது.

★

(நன்றி: த. ஐலண்ட்)

# புலிகளுக்கு எதிரான போர் உறுதியுடன் தொடரும்!

## தளபதி ஹமில்டன் அறிவிப்பு

கொழும்பு, டிச. 27

சமாதானம் நிலைநாட்டப்படும் வரை, பாதுகாப்புப் படையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை உறுதியுடன் தொடருவர்.

கூட்டுப்படைகளின் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க இவ்வாறு ''லங்காபுவத்''துக்கு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில்—

தற்போது அமுல் செய்யப்படும் கட்டளைகளின்படி பாதுகாப்புப் படையினர் வெற்றிகரமாகவும், விரைவாகவும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர உறுதிபூண்டிருக்கின்றனர் என்று கூட்டுப்படைகள் வட்டாரங்கள் தெரிவித்தன என்றும்—

விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவது, வடக்கு-கிழக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவது ஆகியவற்றை உறுதி செய்யும் நோக்கத்தோடு—

சகல மட்டங்களிலும் புலிகளுக்கு எதிராக போரை தொடர்ந்து நடத்த வேண்டியதன் அவசியத்தை இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள வழிகாட்டுதல் வலியுறுத்தியிருக்கிறது என்றும்—

நேற்று இலங்கை வானொலி தனது செய்தி அறிக்கையில் தெரிவித்தது. (ஒ)

### கப்பல் மூலம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து மேற்கொள்ள இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

ப நோ. கூ. சங்கங்களும் கப்பல் மூலம் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் அவரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது

(உ–5)

### ராவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைத்துக் கொள்வது பற்றி முடிவெடுக்கும் முழு அதிகாரம் கழகப் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவிடம் ஒப்படைப்பது.

★ தமிழகத்துக்கு, மாநில அரசுக்குத் தெரிவிக்காமல் இராணுவத்தை மத்திய அரசு அனுப்பியுள்ளது. இது ஜனநாயக விரோதமான செயல்.

★ பாபரி மசூதி இடிபடும் போது செயலற்று இருந்த உத்தரப் பிரதேச அரசு கலைக்கப்பட்டது சரியான நடவடிக்கை.

அதேசமயம் பாரதீய ஜனதா கட்சி ஆட்சி புரிந்த மத்திய பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநில அரசுகளை கலைத்தது கண்டனத்திற்குரியது.

★ மத்தியில் அனைத்து தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும்.

★ தமிழகத்தில் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களில் இந்தி திணிக்கப்படுவது ஆட்சேபிக்கத்தக்கது.

★ புதுவைக்கு தனி மாநில அந்தஸ்து வழங்க வேண்டும்

### உற்சவம்

யாழ்ப்பாணம், டிச. 27

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் மார்கழி மாத ஏகாதசி மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (க-30)

# இன்றைய நிகழ்ச்சிகள்

குருநகர் டிச. 27

யாழ். திருமறைக் கலா மன்றம் நத்தார் பண்டிகையை முன்னிட்டு இன்றும் நாளையும் மாலை 6. 30 மணிக்கு கலை, இசை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது.

இன்று மாலை 6.30 மணிக்கு '' கிறிஸ்மஸ் இராகங்கள் '' நிகழச்சியை நிலைய இசையமைப்பாளர் திரு. எம். ஜேதாஸ் தயாரித்து வழங்குவார்.

நாளை மாலை 6. 30 மணிக்கு '' கன்னி பெற்ற கடவுள்'' இசை உரை நாடகம் இடம்பெறும். (உ 51)

★ ★ ★

குருநகர், டிச. 27

ஆனைக்கோட்டை உயரப்புலம் கிராம முன்னேற்றச் சங்க புனரமைப்பு பொதுக் கூட்டம் இன்று மாலை 4. 00 மணிக்கு உயரப்புலம், கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

(உ-5ட)

★ ★ ★

அராலி, டிச. 27

அராலி மேற்கு முத்தமிழ் நல்லொழுக்க வாலிபர் சங்க பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (உ-2)

# நான்காம் ஆண்டு நிறைவு: பிரேமாவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் நிகழ்ச்சிகள்

ஜனாதிபதி பிரேமதாஸா பதவியேற்று நான்காம் ஆண்டு நிறைவு நாளான— எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி — தெற்கில் அவருக்கு ஆதரவாகவும் எதிராகவும் நிகழ்ச்சிகள் நடத்தப்படவிருக்கின்றன.

பிரேமதாஸாவுக்கு ஆதரவாக — அவர் பங்குபற்றும் பெரும் கொண்டாட்டங்கள் கண்டியில் நடைபெறும்.

அதே நேரம் அவருக்கு எதிராக சமய அமைப்புகள் சில இணைந்து ஜா - எலயில் சில நிகழ்ச்சிகளை நடத்தவிருக்கின்றன. (உ-6)

# ஒதுக்கீட்டின் பிரகாரமே சங்கங்களுக்குப் பொருள்

## செயலக அதிகாரி விளக்கம்

கூட்டுறவு உதவி ஆணையாளரினால் தரப்பட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையிலேயே ப. நோ கூ. சங்கங்களுக்கு செயலகம் உணவுப் பொருள்களை பங்கீடு செய்கிறது. தற்சமயம் 'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்களும் அவ்வாறே வழங்கப்படும்.

யாழ். செயலக அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்

தாம் செலுத்திய பணத்துக்குக் குறைவான பெறுமதிக்கு உணவுப் பொருள்களை வழங்க யாழ் செயலக அதிகாரிகள் உத்தேசித்ததாக உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்திருந்தன. அது குறித்து வினவிய போதே மேற்சொன்ன விளக்கம் தெரிவிக்கப்பட்டது. (அ 5)

### பயிற்சி

பாடசாலைகளில் ஆண்டு 6, 7, 8, வகுப்புகளில் விஞ்ஞானம், சமூகக்கல்வியும் வரலாறும் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு நாள் சேவைக்காலப் பயிற்சி வகுபபு கோட்ட ரீதியாக நான்கு பாடசாலைகளில் நாளை திங்கட்கிழமை காலை 8-30 முதல் பிற்பகல் 4-30 வரை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், வேலணை கோட்டப் பாடசாலைகளுக்கான வகுப்பு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், மருதனார்மடம், பண்டத்தரிப்பு கோட்டங்களுக்கான வகுப்பு உடுவில் மகளிர் கல்லூரியிலும், சாவகச்சேரி கோட்ட வகுப்பு சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், பருத்தித்துறைக் கோட்ட வகுப்பு வட. இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும். [க-111-152]

### தீவகம் விஜயம்

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வலி வடக்கு மற்றும் தீவகத்தின் ஒரு சில இடங்களுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதிகள் அடுத்த வார முற்பகுதியில் செல்லவுள்ளனர்.

# 1,379 படையினர் உயிரிழப்பு! ....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| | | o மோட்டார் ஷெல் — | 752 |
| o ஷொட்கன் — | 17 | o கைக்குண்டுகள் — | 1,082 |
| o ஏ. கே எல். எம். ஜி. — | 77 | o ரைபிள் கிரனேட் — | 64 |
| o ரி 81 எல். எம் ஜி. — | 05 | o புகைக் குண்டு — | 16 |
| o மினிமினி எல் எம. ஜி. — | 05 | o வெளிச்சக் குண்டு — | 160 |
| o அல்ட்டிமக்ஸ் எல். எம ஜி. — | 01 | o வோக்கி ரோக்கி — | 09 |
| o ஜி பி எம் ஜி. — | 04 | o மொபைல் செற் — | 21 |
| o பி கே. எல். எம். ஜி. — | 02 | o செற் — | 06 |
| o 303 எல். எம். ஜி — | 02 | o திசைகாட்டி — | 05 |
| o எம். கே. எம் எம ஜி. — | 01 | o பைனாகுலர் -- | 20 |
| o எல் 3 எம். எம். ஜி. — | 03 | o இரவுப் பார்வைச் சாதனம் — | 03 |
| o 50 கலிபர் — | 04 | o ஸ்கோப் — | 33 |
| o 203 கிரனேட் பிஸ்டல் — | 24 | o 7. 62x39 நடுத்தர ரவைகள் — | 3,67,543 |
| o ஆர். பி. ஜி லோஞ்சர் — | 23 | o நேட்டோ ரவைகள் — | 53,574 |
| o ஷெல் லோஞ்சர் — | 21 | o பி. கே ரவைகள் — | 3,881 |
| o 106 எம். எம் ஆர். ஸி. எல். — | 04 | o 0.303 ரவைகள் — | 5 593 |
| o 40 எம். எம். ஷெல் — | 401 | o 5.56 45 எம். எம். ரவை — | 2,35,195 |
| o ஆர் பி. ஜி. ஷெல் — | 298 | o 9x19 எம் எம் ரவைகள் — | 16 |
| o 106 எம். எம். ஆர். ஸி எல். | | o 50 கலிபர் ரவை — | 24,408 |
| ஷெல் | [illegible] | o 14.5 எம். எம். ரவை — | 2,689 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச அதிகாரி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) பொதுமக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

கண்ணிவெடிச் சம்பவத்தில் அரச உயர் அதிகாரியான முஸ்லிம் உதவி அரசஅதிபர் கொல்லப்பட்டிருப்பதால், அப் பகுதியில் தமிழர்கள் மீது தாக்குதல் நடப்பதைத் தடுக்கும் நோக்குடன் அங்கு பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவித்தன.

## புதிய ஆண்டில் .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆனாலும் போரை நிறுத்த ஸ்ரீலங்கா அரசு விரும்பவில்லை. போர் மூலம் சீர்குலைந்த போரிடும் உறுதியை போர் மூலமே சீர் செய்ய சிங்களப் படைத்துறைத் தலைமை முடிவெடுத்துள்ளது.

புலிகளுக்கு எதிரான போரில் தான் இராணுவ மேல் நிலை எய்த வேண்டும் என்ற நோக்கத்தையே சிங்கள அரசு கொண்டுள்ளது.

எனவே பிறக்கப் போகும் புதிய ஆண்டில் — 1993இல் — போரை மேலும் தீவிரமாக்க சிங்களத் தளபதிகள் தீர்மானித்துள்ளனர்.

சிங்கள தேசத்தைப் பொறுத்தளவில் அவர்களுக்கு இராணுவ வெற்றி எனக் கொண்டாடக் கூடியது யாழ் குடாநாட்டைக் கைப்பற்றுவதுதான்.

குடாநாட்டைக் கைப்பற்றுவதன் மூலம் தான் புலிகளைப் பலமிழக்கச் செய்யலாம் அதன் மூலம் தான் படையினர் இராணுவ மேல் நிலையை அடையலாம் என்பது படைத்துறையின் கணிப்பு.

ஆகவே வரும் ஆண்டில் யாழ். குடாநாடு மீது பல இராணுவ நடவடிக்கைகளை சிங்களப்படை ஆரம்பிக்கலாம். — என்று ''விடுதலைப் புலிகள்'' சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது.

(உ)


விளையாட்டுத் துறைக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் யாழ். மக்களுக்கு நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்களுடன்

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வழங்கும்

'ராஜன்ஸ்' குழுவினரின்

"இன்னிசை மழை"

இன்று மாலை 5 மணிக்கு

வேம்படி மகளிர் உயர் கல்லூரி மண்டபம்

29 - 3 - 92 நடைபெற இருந்த நிகழ்ச்சியே இன்று மாலை நடைபெறும்.)

ரிக்கட்டுகள் மண்டப வாயிலில்.

[சி 405 ]


## ஈராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 12 — 12 — 1928

உதிர்வு: 21 — 12 — 1990

அமரர்

### செல்லையா குமாரலிங்கம்

(இளைப்பாறிய தபாலதிபர்)

திதி: 27 — 12 — 1992

நதி ஒன்று வற்றி - நம் வாழ்க்கை நந்தவனம் வரண்டு இரண்டு ஆண்டுகளாகிவிட்டன. நினைவுகள் நிலைத்து நிற்பதனால் - எம் நெஞ்சங்களில் நீங்கள் இன்றும் நிலைத்துக் கொண்டே... ...

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்


- குடும்பத்தினர்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(சி-28 2)

## 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

(28 - 12 - 1992)



### அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம்

மலர்வு: 26 - 12 - 1920

மறைவு: 28 - 11 - 1992

'வளமான வாழ்வுக்காய்
களையாமல் உழைத்த எம் தெய்வமே!
நீங்காத நினைவுடன் - நின்
நிறைவான சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்'

அன்னாரின் மரணச் சடங்கிலும் அந்தியேட்டி கிரியைகளிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள், அன்பர்கள் யாவர்க்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் 28-12-92 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக் கிரியைகளிலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- சுப்பிரமணியம் குடும்பத்தினர்.

21/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(23805)

## நினைவலையில் 45ஆம் நாள்



### அன்ரன் அமல்ராஜ் பிரேமரதி

உதித்தது: 02 - 02 - 1970

உதிர்ந்தது: 11 - 11 - 1992

வானமதில் பவனிவந்த வெண்மதியே - நீ
போனவழி பகராத மர்மமென்ன?
மீண்டுமிங்கு வந்தொருகால் பேசிடவே
வேண்டுகிறோம் மனமிரங்கி வந்திடாயோ?

-குடும்பத்தினர்.

14 வீடமைப்புத்திட்டம்,
கற்கோவளம்,
பருத்தித்துறை.

[23804]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் திரு. க. கார்த்திகேசு

மலர்வு: 01 - 04 - 1905

உதிர்வு: 29 - 11 - 1992

அன்பின் பிறப்பிடமாய் அணையாத பெருவிளக்காய் இன்பமெலா மெமக்கீந்த இருநிதியே - உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

எமது இல்லத்தில் 29-12-1992 செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள அந்தியேட்டி வீட்டுக்கிரியையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும்:
அன்புச் செல்வங்கள்.

கே. தனபாலசிங்கம்,
''கற்பக மகால்'',
பூதராயர் கோவிலடி,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(5677)


நாட்காட்டி தயாரிப்பில் புதிய வெளியீடு!

திருவள்ளுவர் நாட்காட்டி-1993



அழகிய திருவள்ளுவர் படத்துடன் சிறப்பான ''ஒவ் - செற்'' அச்சில் சகல விடயங்களையும் தாங்கி வெளியாகியுள்ளது

தமிழ்ப் பிரதேசத்தின் அறிஞர்களின் பாராட்டைப் பெற்றது எங்கும் விற்பனையாகுகின்றது.

திருக்குறளைப் படித்துப் பயன் பெற

திருவள்ளுவர் நாட்காட்டி

ஏக விநியோகஸ்தர்:

புஷ்பா அன் கம்பனி

(வண்ணார்பண்ணை - தபாலகம் முன்பாக)

293, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4048)


மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org